சேர்க்கவில்லை என்று தெரியவில்லை. அந்தப் பிரிவையும் இந்தச் சட்டத்திலே சேர்க்க வேண்டும். அதன் மூலம் ஒரு நிறுவனம் மோசமாக நடக்கிறது என்றால் அதனுடைய நிர்வாகத்தை எடுத்து நடத்த நாம் அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்குப் பயன்படும் என்று கூறி அமைகிறேன்.

3. விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.

வட சென்னை அனல் மின் நிலையத்திற்கு கருவிகள் வாங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட நடைமுறை குறித்து பொதுப்பணித்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை வெளியிட அனுமதிகோரி உள்ளார். அவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த அறிக்கையை அமைச்சர் வெளியிடுவார். மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன் கீழ் ஒரு அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 4-55

வட சென்னை அனல் மின் நிலையத்தில் உபயோகப் படுத்தப்படும், நிலக்கரி, மின்சார உற்பத்திக்காக கொதி கலனில் எரிக்கப்பட்டு நிலக்கரி அதன் சாம்பலை அப்புறப் படுத்தக் கூடிய இயந்திரக் கருவிகள் தயாரிப்பதற்கான 'ஆஷ் ஹேண்டிலிங் சிஸ்டம்' என்ற திட்டத்திற்கு 14—12—1990 அன்று பகிரங்க ஏல ஒப்பந்தங்கள் முறையாகக் கோரப்பட்டு 10 நிறுவனங்கள் இந்த ஒப்பந்தத்திலே பங்கேற்றன. இந்த ஒப்பந்தங்கள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, இத்திட்டம் சம்பந்தமாக தொழில் நுட்ப ஆலோசனை பெறப்பட்டு தீவிர பரிசீலனைக்குப் பிறகு 30—10—1991 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம் குறைந்தபட்சத் தொகைக்கு கோரி 10 டெக்கான் மெக்கானிக்கல் வொர்க்ஸ்' பூனா என்ற நிறுவனத்திற்கு கொடுக்கலாம் என்று முடிவு எடுத்து, 31-10-1991 அன்று மேற்கண்ட கம்பெனிக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதற்கான பர்ச்சேஸ் ஆர்டர் 23—1—1992 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கண்ட கம்பெனிக்கு வழங்கியது. பர்ச்சேஸ் ஆர்டரின் மதிப்பீட்டின் மொத்தத் தொகை ரூ. 33.70 கோடியாகும். இதற்கிடையில் அந்த நிறுவனம்

விலைவாசி ஏற்றத்தினால் அதாவது இரும்பு, எஃகு, தொழிலாளர்கள் கூலி உயர்வு, வங்கிக் கடன் கட்டுப்பாடு, ரூபாயின் மதிப்புக் குறைவு போன்ற பல காரணங்களால் விலையை உயர்த்தக் கோரியுள்ளது. இது சம்பந்தமாக தொழில் நுட்ப நிறுவனமான டாட்டா கன்சல்டன்ட்டின் கருத்துப் பெற்று தமிழ்நாடு மின்சார வாரியம் ஆய்வு செய்து வருகிறது. இந்த ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த பட்ச ஏலம் கேட்ட டெக்கான் மெக்கானிக்கல் கம்பெனிக்கும், அடுத்தபடியாக கோரிய இன்டோர் கம்பெனிக்கும் உள்ள வித்தியாசம் ரூ. 20.86 கோடியாகும். அதுவும் இல்லாமல் மறு ஏலம் விட்டால் மேலும் 20 கோடிக்கு மேல் தேவைப்படும் என்று தொழில் நுட்ப வல்லுநர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் மறு ஒப்பந்தம் கோரினால் வட சென்னை அனல் மின் நிறுவனம் நிறுவுவதில் ஓராண்டு காலத்திற்குமேல் கால தாமதம் ஆகும். அவ்வாறு காலதாமதம் ஆகின்றபோது, ஆசிய வளர்ச்சி வங்கி அதாவது ஏ.டி.பி. ஏசியன் டெவலப்மெண்ட் பேங்க், வங்கியில் கடன் பெற்று இந்த வட சென்னை அனல் மின் நிலையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதால் அதற்குரிய வட்டித் தொகையும் அதிகமாக மின்சார வாரியம் செலுத்துவதுடன் பெருமளவில் மின்சார உற்பத்தியும் பாதிக்கப்படும் என்பதும் தொழில் நுட்ப வல்லுநர்களால் கூறப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்கனவே என்னென்ன நடைமுறைகளை தமிழ்நாடு மின்சார வாரியச் சட்டத்திட்டங்களுக்குட்பட்டு பின்பற்றி வருகிறதோ அதுபோன்ற நடைமுறைதான் இந்தத் திட்டத்திலும் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆகவே, ஒப்பந்தப்புள்ளி வழங்குவதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 110 ஸ்டேட்மெண்டின் மேல் டிஸ்கசன் இல்லை. திரு. வி. கே. லட்சுமணன்.

6. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஊ) கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலை தடை செய்தல்) சட்ட முன்வடிவு, 1992—தொடர்ச்சி.

*திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிறுவனங்களில் கட்டாய நன்கொடை வசூல் செய்வதை தடை செய்ய வேண்டுமென்ற இந்தச் சட்ட முன்வடிவினை கொள்கையளவிலே நான் வரவேற்றாலும்கூட, இதை நல்ல முறையிலே அமுல்படுத்த முடியுமா என்பதிலே எனக்குள்ள சில சந்தேகங்களை இங்கே வெளியிடாமல் இருக்க முடியவில்லை. நான் ஏற்கனவே